SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியனஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!

குரோதி வருடம் கார்த்திகை 6 | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 18

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● வியாழக்கிழமை, நவம்பர் 21, 2024 ● வெளியூர்: 22-11-2024, வெள்ளிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 134 ● 6 பக்கம் ● ரூ.6

## அதிக கன மழை பெய்யக்கூடும் என்பதால்

# தமிழகத்துக்கு 26ம் தேதி ரெட் அலர்ட்

## இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, நவ. 21-**

தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு அதிகனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை மையம் ரெட் அலர்ட் விடுத்திருந்தது. இந்நிலையில் வங்கக்கடலில் நாளை மறுநாள் (நவ.23ம் தேதி) காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மேலும் நவ.25ம் தேதி தென்மேற்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அது வலுப்பெற வாய்ப்புள்ளதாகவும், நவ.26ம் தேதி தமிழ்நாட்டில் கன முதல் மிக கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இதனிடையே சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. கேரள கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் இன்று (2111-2024) ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும். இதன் காரணமாக, 23ஆம் தேதி தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும். இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த இரு தினங்களில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக, இன்று (21 11-2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.




நாளை (2211-2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

2311-2024 மற்றும் 2411-2024: தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

2511-2024: கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

2611-2024: தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் கன முதல் மிக கன மழையும், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் புதுவையில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது

அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 3132 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2526 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக் கூடும்.

2111-2024: தென்கிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

2211-2024: தென்கிழக்கு வங்கக்கடலின் தெற்கு பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

23 11- 2024: தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்" என்று வானிலை மையம் தெரிவித்திருந்தது.

தென்கிழக்கு வங்கக்கடலில் 23ந்தேதி (சனிக்கிழமை) காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது. இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்ததாக தாழ்வு மண்டலமாகவும், புயலாகவும் வலுப்பெறக் கூடும் என தனியார் வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விவாகரத்து வழக்கு: நீதிமன்றத்தில் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் ஆஜர்



**சென்னை, நவ. 21-**

நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யாவுக்கும், இயக்குனர் கஸ்தூரி ராஜாவின் மகன் நடிகர் தனுசுக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் கடந்த 2004ம் ஆண்டு நவம்பர் 18ந் தேதி சென்னையில் திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். கருத்து வேறுபாடு காரணமாக கடந்த சில ஆண்டுகளாக இவர்கள் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றனர்.

தனுஷ் ஐஸ்வர்யா இடையேயான பிரச்சினையை தீர்க்க அவர்களுடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் இருவரும் விவாகரத்து பெறுவதில் உறுதியாக இருந்தனர். இந்த நிலையில் இருவரும் பரஸ்பர விவாகரத்து கோரி சென்னை குடும்ப நல கோர்ட்டில் மனு தாக்கல் செய்தனர். அதில், 2004ம் ஆண்டு நடைபெற்ற தங்களின் திருமணத்தை செல்லாது என அறிவிக்க வேண்டும்' என கூறியிருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த குடும்பநல கோர்ட்டு, தனுஷ் ஐஸ்வர்யாவை நேரில் ஆஜராக உத்தரவிட்டது. இதையடுத்து அந்த மனு நீதிபதி சுபாதேவி முன்னிலையில் கடந்த 2ம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நடிகர் தனுஷ், ஐஸ்வர்யா ஆகியோர் ஆஜராகவில்லை. இதைத்தொடர்ந்து, வழக்கின் விசாரணையை 21ந் தேதிக்கு (அதாவது இன்று) தள்ளிவைத்த நீதிபதி, அன்றைய தினம் இருவரும் ஆஜராக உத்தரவிட்டார்.

இந்த நிலையில், விவகாரத்து வழக்கு தொடர்பான விசாரணைக்காக ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இன்று சென்னை குடும்ப நல நீதிமன்றத்தில் நீதிபதி முன்பு ஆஜரானார். அப்போது தனுஷ் வந்துகொண்டிருப்பதாக அவரது வழக்கறிஞர் நீதிபதியிடம் தெரிவித்த நிலையில் விசாரணையை 12 மணிக்கு ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டார். கடந்த 3 விசாரணைக்கு இருவரும் ஆஜராக நிலையில், ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தற்போது ஆஜராகியுள்ளார்.

## பெங்களூருவில் 25 இடங்களில் லோக்ஆயுக்தா போலீசார் சோதனை

**பெங்களூரு, நவ. 21-**

கர்நாடக மாநிலம் காவிரி பாசன கழகத்தின் நிர்வாக இயக்குனர், மற்றும் பெங்களூரு கலால் துறை கண்காணிபாப்பாளர் உள்பட 4 அதிகாரிகள் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக லோக் ஆயுக்தா போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவர்களுக்கு சொந்தமான வீடுகள், மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களின் வீடுகள், அலுவலகங்கள், பினாமி என சந்தேகிக்கப்படும் நபர்களின் வீடுகள் உள்பட 25 இடங்களில் லோக் ஆயுக்தா போலீசார் காலை முதல் அதிரடி சோதனை நடத்தி வருகிறார்கள்.

## அதிரடியாக உயர்ந்த தங்கம் விலை

**சென்னை, நவ. 21-**

தங்கம் விலை இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து விலை மளமளவென சரிந்து வந்தது. கடந்த 17ந்தேதி வரை விலை குறைந்து காணப்பட்ட நிலையில், அன்றைய தினம் ஒரு கிராம் ரூ.6 ஆயிரத்து 935க்கும், ஒரு சவரன் ரூ.55 ஆயிரத்து 480க்கும் விற்பனை செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 18ந்தேதியில் இருந்து விலை உயரத் தொடங்கியது. அன்றைய தினம் சவரனுக்கு ரூ.480ம், அதற்கு மறுநாள் (19 ந்தேதி) சவரனுக்கு ரூ.560ம் அதிகரித்து இருந்தது. இதனையடுத்து நேற்றும் தங்கம் விலை அதிகரித்து காணப்பட்டது.

அதன்படி நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.7 ஆயிரத்து 65க்கும், ஒரு சவரன் ரூ.56 ஆயிரத்து 520க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கிராமுக்கு ரூ.50ம், சவரனுக்கு ரூ.400 ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.7 ஆயிரத்து 115க்கும், ஒரு சவரன் ரூ.56 ஆயிரத்து 920க்கும் விற்பனை ஆனது.

இந்த நிலையில் இன்றும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.240 உயர்ந்தது. கிராமுக்கு 30 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.7,145க்கும் சவரனுக்கு ரூ.240 உயர்ந்து ஒரு சவரன் ரூ. 57,160க்கும் விற்பனையாகிறது.

இதனால் கடந்த 4 நாட்களில் மட்டும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.1680 உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ரஷியா உக்ரைன் இடையே மீண்டும் போர்ப்பதற்றம் ஏற்பட்டதன் விளைவாக தங்கத்தின் மீது முதலீட்டாளர்களின் கவனம் சென்றுள்ளது. இதன் காரணமாக அதன் விலை உயரத் தொடங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது. வெள்ளி விலையை பொறுத்தவரையில் மாற்றம் இல்லாமல், ஒரு கிராம் ரூ.101க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது.

## ஜார்கண்டில் பஸ் கவிழ்ந்ததில் 7 பேர் பலி



**ராஞ்சி, நவ. 21-**

ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் மாவட்டத்திலிருந்து பஸ் ஒன்று பயணிகளுடன் பாட்னா நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது கோர்ஹர் காவல் நிலைய பகுதிக்கு அருகே சென்ற பஸ் சாலையில் திரும்பும்போது எதிர்பாராதவிதமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர் மற்றும் பலர் காயமடைந்தனர். சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பஸ்சில் மேலும் சிலர் சிக்கியிருப்பதால் அவர்களை மீட்கும் பணியில் போலீசார் மற்றும் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இந்த சம்பவம் பற்றி விசாரணை நடைபெற்று வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி ஹசாரிபாக் எஸ்பி அரவிந்த் குமார் சிங் கூறுகையில், பஸ்சில் சுமார் 50 பயணிகள் இருந்ததாகவும், விபத்தில் இதுவரை 7 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

பிறவாமை அருளும் அகத்தியரின் ஆத்ம காயத்ரி மந்திரம்



ஓம் அகத்து ஈசாய வித்மஹே
கால ஹஸ்தாய தீமஹி
தந்நோ சர்வப் ப்ரசோதயாத்.

பொருள்: எனது ஆன்மாவே,நீபரமாத்மாவினை சென்றடைய வேண்டிய காலம் உதித்துள்ளது நீ விழிப்படைவாயாக...

தினமும் காலையும் மாலையும் குறைந்தது 27 முதல் 108 முறை 48 நாட்கள் உரைத்தால் கீழ்கண்ட பலன்கள் கிட்டும்..
உங்கள் வேண்டுதல் நிறைவேறும்

1) நோய்கள் குணமாகும் (மௌனமாக உரைத்தால்)
2) பிறவாமை நிலை சித்திக்கும் / கர்மவினைகள் கரையும் (ஓசையுடன் உரைத்தால்)
3) கணவன் மனைவி ஒற்றுமை குடும்ப அமைதி கிடைக்கும் (குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து உரைத்தால்)
4) உங்கள் உயிருக்கு உணவாகிறது; பிரபஞ்ச ஆற்றல் ஈர்க்கப்படும்.

பிரளய அழிவுகளிலிருந்து காக்கப்படுவீர்

9789032199 7996774757
www.anbaalayam.com

# மழைநீர் வடிந்து செல்ல ஜேசிபி மூலம் பாதைகளை சரி செய்யும் பணி



**இராமநாதபுரம், நவ. 21-**

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்கள் வாழும் தெருக்களிலும் வீடுகளிலும் தண்ணீர் சூழ்ந்து வருவதனால் அலுவலர்கள் தண்ணீரை அகற்றுவதற்கு தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றனர். இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியம் நாகாட்சி மற்றும் என் மனம் கொண்டான் உச்சிப்புரை ஊராட்சிகளில் தண்ணீர் வடிந்து செல்வதற்கு ஜேசிபி வைத்து மழை நீர் செல்வதற்கு பாதைகளை சரி செய்தும், மழைநீர் அகற்றும் பணி விரைவாக நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மண்டபம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் சோமசுந்தரம் அலுவலர்களுடன் சென்று பார்வையிட்டார்.

# புதுச்சேரி சுகாதாரத்துறை சார்பில் நோய்த்தடுப்பு ஊசி குறித்து பயிற்சி பட்டறை



**புதுச்சேரி, நவ. 21-**

புதுச்சேரி சுகாதார துறையும் உலக சுகாதார அமைப்பும் இணைந்து 2024ம் ஆண்டிற்கான நோய்த்தடுப்பு ஊசியைத் தொடர்ந்து வரும் பாதகமான நிகழ்வு (AEFI) கண்காணிப்பு மற்றும் செயல்பாடுகள், செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் குறித்து மாநில பரப்புரை பட்டறை நவம்பர்–19 மற்றும் 20ஆம் தேதிகளில் இரண்டு நாட்கள் புதுச்சேரியில் உள்ள ராஜீவ் காந்தி மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை கலந்தாய்வு கூடத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி பட்டறையை புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் செவ்வேள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையின் மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ஐயப்பன், உலக சுகாதார அமைப்பின் துணை மண்டலக் குழுத் தலைவர் டாக்டர் ஆஷா ராகவன், உலக சுகாதார அமைப்பின் புதுச்சேரி உறுப்பினர் டாக்டர் சாய்ரா பானு, துணை இயக்குனர் (தடுப்பூசி பிரிவு) (பொறுப்பு) மருத்துவர் ரகுநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மேலும் இப்பயிற்சி பட்டறையில் மாநில AEFI குழு உறுப்பினர்கள், காரைக்கால் மாகி ஏனம் துணை இயக்குனர்கள், ஜிப்மர் மருத்துவமனை, இந்திரா காந்தி மருத்துவ கல்லூரி, ராஜீவ் காந்தி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை சார்ந்த அனைத்து துறைகளின் மருத்துவ வல்லுனர்களும் புதுச்சேரியை சார்ந்த அனைத்து பிராந்தியங்களின் தலைமை மருத்துவ அதிகாரிகளும் கலந்துகொண்டு குழந்தைகளுக்கான நோய் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை பற்றியும், எவ்வாறெல்லாம் பாதுகாப்பான முறையில் தடுப்பூசிகளை செலுத்த வேண்டும் என்பதைப் பற்றியும், 100% குழந்தைகளுக்கு தடுப்பூசி பாதுகாப்பான முறையில் சென்றடைவதை பற்றியும், 2024ம் ஆண்டிற்கான புதுப்பிக்கப்பட்ட நோய்த்தடுப்பு ஊசியைத் தொடர்ந்து வரும் பாதகமான நிகழ்வு (AEFI) கண்காணிப்பு மற்றும் செயல்பாடுகள்: செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் பற்றியும் மிக விளக்கமாக சிறப்பான முறையில் கலந்தாய்வு நடத்தப்பட்டது.

# காங்கிரஸ் கட்சி நிர்வாகி ஜெயக்குமார் கொலையில் குற்றவாளிகளை கண்டுபிடிப்பது காவல்துறைக்கு சவாலாக உள்ளது

## தென்காசியில் செல்வப்பெருந்தகை பேட்டி



**தென்காசி, நவ. 21-**

தென்காசியில் தமிழ்நாடு காங்கிரஸ் கிராம கமிட்டி மறு சீரமைப்பு தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் ஆயிரப்பேரி கிராம காங்கிரஸ் கமிட்டி புதிய நிர்வாகிகளை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில தலைவர் செல்வப் பெருந்தகை அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் இந்தியா கூட்டணி ஒற்றுமையுடன் உள்ளது. சமூக வலைதளங்களில் காங்கிரஸ் கட்சி விஜயுடன் கூட்டணி வைப்பதாக பரவி வருகிறது. தமிழக வெற்றி கழகத்துடன் காங்கிரஸ் கூட்டணி கிடையாது. நெல்லை காங்கிரஸ் கட்சி நிர்வாகி ஜெயக்குமார் படுகொலை செய்த குற்றவாளிகளை கண்டுபிடிப்பது காவல்துறைக்கு சவாலாக உள்ளது. இனிவரும் காலங்களில் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம் தெரிவித்தார். நிகழ்ச்சியில் அமைப்புச் செயலாளர் ராம் மோகன் ,நெல்லை பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ். தென்காசி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பழனி நாடார் எம் எல் ஏ ரூபி மனோகரன், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் உதயகிருஷ்ணன், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி பூமாதேவி மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்கள் கூட்டமைப்பு தலைவர் டி கே பாண்டியன்,வட்டார காங்கிரஸ் தலைவர் பெருமாள்,தென்காசி நகர தலைவர் மாடசாமி ஜோதிடர், பொருளாளர் ஈஸ்வரன் ,மாவட்ட பொதுச் செயலாளர் சந்தோஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பசுமை கோவை செயலினையை அமைச்சர் செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்




கோயம்புத்தூர் மாநகராட்சி வடவள்ளி பகுதியில் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி வார்டு எண்.39க்குட்பட்ட மகாராணி அவென்யூவில் பசுமை கோவை செயலினை (Tree Plantation app) துவக்கி வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, மாநகராட்சி மேயர் ஆ.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன் மேற்கு மண்டல குழு தலைவர் தெய்வயானை தமிழ்மறை, அணிகள் குழு தலைவர் சாந்தி முருகன் நகர அமைப்பு குழு தலைவர் சந்தோஷ், மாமன்ற உறுப்பினர் லட்சுமி பாலகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

# 57வது தேசிய நூலக வாரவிழா




57வது தேசிய நூலக வாரவிழாவை முன்னிட்டு கடலூர் மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கேடயங்களை வழங்கினார். உடன் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# மும்முனி ஊராட்சியில் புதிய குளம் அமைக்கும் பணி ஆட்சியர் ஆய்வு



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் வந்தவாசி வட்டம், மும்முனி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் புதிய குளம் அமைக்கும் பணியை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

# "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்




நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் மோகனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.4 கோடியே 50 லட்சம் மதிப்பில் புதிய கட்டிடங்கள்

## அமைச்சர் மூர்த்தி திறந்து வைத்தார்



மதுரை, நவ. 21-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ.4 கோடியே 50லட்சம் மதிப்பில் புதிய கட்டிடங்கள் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. வலையபட்டி ஊராட்சி, மஞ்சமலை கோவில் செக்குமடையில் ரூ.17 லட்சம் மதிப்பில் உணவுக்கூடம், அரசம்பட்டியில் ரூ.8.10 லட்சம் மதிப்பில் கலையரங்கம் உள்ளிட்ட புதிய கட்டிடங்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமை தாங்கி ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், மாவட்ட அவை தலைவர் பாலசுப்ரமணியன், திமுக ஒன்றிய செயலாளர்கள் தனராஜ், பரந்தாமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுக்குழு உறுப்பினர் முத்தையன், ஆனையூர் பகுதி கழக செயலாளர் மருதுபாண்டி, நகர் செயலாளர்கள் ரகுபதி, மனோகரவேல் பாண்டியன், யூனியன் ஆணையாளர்கள் கலைச்செல்வி, வள்ளி, பொறியாளர் விக்னேஷ், ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரி இதயசந்திரன், ஒன்றிய குழு தலைவர் பஞ்சு, துணை தலைவர் சங்கீதா மணிமாறன், பேரூராட்சி தலைவர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், சுமதி பாண்டியராஜன், துணைத் தலைவர் சுவாமிநாதன், ஊராட்சி மன்ற தலைவர்கள் பெருமாள், சுகந்தி கண்மணி திரவியம், விஜயலட்சுமி முத்தையன், ஜெயமாலா பாலமுருகன், பழனிச்சாமி, அழகுமணி சசி, சத்யா செந்தில்குமார், சேது சீனிவாசன், முருகையா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனுஷ்கோடி, அழகுமணி, துணை தலைவர்கள் ராஜேஷ், தர்மாராஜா, கோபால், ஒன்றிய கவுன்சிலர்கள் சரவணன், ஒப்பந்தகாரார்கள் கண்ணன், பரந்தாமன், ஆண்டிச்சாமி, வீரனன், ஜெகதீசன், ஒன்றிய அவை தலைவர்கள் நடராஜன், பழனி, திமுக நிர்வாகிகள் ராதாகிருஷ்ணன், சுந்தர், இளைஞரணி சந்தனகருப்பு, மருது, மாணவரணி யோகேஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பிரதாப், பொறியாளர் அணி ராகுல், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் சேந்தமங்கலம் ஊராட்சியில் ரூ.2 கோடியே 54 லட்சம் மதிப்பில் இரண்டு புதிய பாலங்கள், கோடாங்கிபட்டி ஊராட்சியில் ரூ.14.30 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மையம், பாறைப்பட்டி ஊராட்சியில் ரூ.14.55 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மையம், உள்ளிட்ட பல்வேறு புதிய கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

# காரைக்கால் அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் சிறுபான்மையினர் தின விழா



காரைக்கால். நவ. 21-

காரைக்கால் அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில், நேற்று சிறுபான்மையினர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. காரைக்கால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், அன்னை இந்திரா காந்தி பிறந்த நாளை முன்னிட்டு, தேசிய ஒருமைப் பாட்டு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, நேற்று காரைக்கால் அவ்வையார் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் சிறுபான்மையினர் தின விழா கொண்டாடப் பட்டது. கொண்டாடப் பட்டது. இந்த விழாவுக்கு புதுச்சேரி குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திருமுருகன் தலைமை தாங்கினார். அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி முதல்வர் அம்பிகாதேவி முன்னிலை வைத்தார். ஓய்வு பெற்ற அரசு பள்ளி தலைமை ஆசிரியர் ஸ்ரீகாந்த பக்ஷி ராஜன், காரைக்கால் இமாம் பெரிய பள்ளி ஜாமிஆ மஸ்ஜித் முகமது ஷூஜப், ஓய்வு பெற்ற பண்டக காப்பாளர் கலைமாமணி சூசைராஜ் ஆகியோர் சிறுபான்மையினர் நலம் காத்தல் என்றும் அவசியம் என்ற தலைப்பில் பேசினார்கள். விழாவுக்கான ஏற்பாடுகளை சமூக நலத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் சிறப்பாக செய்திருந்தார்.

### தமிழ்நாடு தடகள சங்கம் சார்பில்

# மாநில அளவிலான தடகள போட்டியில் சிறப்பாக விளையாடிய மாணவிக்கு ஊக்கத்தொகை வழங்கல்



கோவை, நவ. 21-

ஈரோட்டில் நடைபெற்ற மாநில அளவிலான தடகள போட்டிகளில் பங்கேற்று சிறப்பாக விளையாடிய 8 வீரர் வீராங்கனைகளை தமிழ்நாடு தடகள சங்கம் தேர்ந்தெடுத்து ஆண்டு முழுவதும் மாதம் ரூ.6000 ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து கோவையில் மாணவி திவ்ய ஸ்ரீ–க்கு ஊக்கத்தொகை ரூபாய் 6 ஆயித்திற்க்கான காசோலை வழங்கும் நிகழ்ச்சி கோவை நேரு உள் விளையாட்டு அரங்கம் மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் தடகள சங்கத்தின் செயலர் சம்சுதீன் பொருளாளர் டாக்டர் ஜான் சிங்கராயர் தொழில்நுட்ப தலைவர் சீனிவாசன் மற்றும் திவ்யஸ்ரீயின் பயிற்சியாளரும் தடகள சங்கத்தின் மூத்த துணைச் செயலாளரும் நந்தகுமார், மூத்த பயிற்சியாளரும் சங்கத்தின் துணைச் செயலாளர் நிஜாமுதீன், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவிக்கு சால்வை அணிவித்து காசோலை வழங்கி கௌரவித்தனர். இது குறித்து நிர்வாகிகள் பேசுகையில் தமிழ்நாடு தடகள சங்கம் சார்பாக சிறந்த தடகள வீராங்கனையாக கோவை மனைவி தேர்ந்தெடுக்கப்பட்டது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மேலும் தேர்ந்தெடுத்த தமிழ்நாடு தடகள சங்க செயலாளர் லதா அவர்களுக்கும் தலைநகர சங்கத் தலைவர் டாக்டர் தேவாரம் அவர்களுக்கும் எங்களது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் ஆண்டு முழுவதும் மாதம் 6000 ஊக்கத்தொகை வழங்குவது ஏழை மாணவ மாணவர்களுக்கு விளையாட்டுத்துறையில் சாதிக்க நினைக்கும் வீரர் வீராங்கனைகளுக்கு உறுதுணையாக இருக்கும் இதுபோன்று கோவையிலிருந்து அதிகப்படியான வீரர் வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பேசினார்கள். இந்நிகழ்ச்சியில் நேரு விளையாட்டு அரங்கில் பயிற்சி பெற்று வந்த அனைத்து விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் கிளப்புகள் மற்றும் பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி பள்ளிகளில் மாணவர்கள் பாதுகாப்பை உறுதி செய்ய போக்சோ கமிட்டி

## கல்வித்துறை அதிரடி நடவடிக்கை

புதுச்சேரி, நவ. 21-

புதுச்சேரி பள்ளிகளில் மாணவ மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்ய போக்சோ சட்டத்திற்கு இணங்க, பள்ளி அளவில் பல்வேறு போக்சோ கமிட்டிகள் உருவாக்க சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இது குறித்து பள்ளி கல்வித்துறை இயக்குநர் பிரியதர்ஷினி, பள்ளிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும், மாணவ மாணவியர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பள்ளி அளவிலான போக்சோ கமிட்டி தவறாமல் உருவாக்கப்பட வேண்டும்.

கமிட்டியின் தலைவராக பள்ளி முதல்வர், துணை முதல்வர், தலைமை ஆசிரியர் செயல்பட வேண்டும். கமிட்டி உறுப்பினர்களாக ஒரு மூத்த பெண் ஆசிரியர், ஒழுங்கு நடவடிக்கைகள் எதற்கும் ஆட்படாத ஆண் ஆசிரியர் ஒருவரும், பெற்றோர் ஒருவரும், குழந்தைகள் நலன் தொடர்பான நலப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஒரு அரசு, அரசு சாரா சமூக நல அமைப்பின் உறுப்பினர் ஒருவரும், அதே பள்ளியில் பயிலும் ஒரு மாணவனும், ஒரு மாணவியும் உறுப்பினர்களாக செயல்படுவார்கள். பள்ளி அளவில் மட்டுமின்றி, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் போக்சோகமிட்டி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநில அளவிலான போக்சோ கமிட்டியில், பள்ளி கல்வி இயக்குநர் தலைவராக செயல்படுவர். உறுப்பினர்களாக துணை இயக்குநர் (நிர்வாகம்), இணை இயக்குநர், மாநில திட்ட இயக்குநர், இணை இயக்குநர், சட்ட வல்லுநர் மற்றும் பெண்கள், குழந்தைகள் நலத்துறை உதவி இயக்குநர் உறுப்பினர்களாக செயல்படுவர்.

மாவட்ட அளவிலான போக்சோ கமிட்டியில் துணை இயக்குநர், முதன்மை கல்வி அலுவலர், பள்ளி கல்வி இயக்குநரின் பிரதிநிதி தலைவராக செயல்படுவர். பள்ளித்துணை ஆய்வாளர் அல்லது அதற்கு இணையான தகுதியில் ஒரு பெண் மற்றும் ஒரு ஆணு உறுப்பினார்கள், சட்ட வல்லுநர், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்துறை அல்லது குழந்தைகள் நலம் தொடர்பான சமூக நல, அரசு சாரா அமைப்பு உறுப்பினர் ஆகியோர் உறுப்பினர்களாக செயல்படுவர். இந்த கமிட்டிகள் மாணவ மாணவியரிடம், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களிடம், குழந்தைகள் நலம், பாலியல் பாதுகாப்பு பற்றி விழிப் புணர்வு ஏற்படுத்தவும், பாலியல் துன்புறுத்தல் நிகழ்வுகள் நடக்காத வகையிலும், பாலியல் துன்புறுத்தல் நிகழ்வுகள் நடந்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணம், பாதிப்பு ஏற்படுத்தியவர்களுக்கு சட்டப்படி தண்டனை பெற்று தரும் பணிகளை மேற்கொள்ளும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### வில்லியனூர் தொகுதியில்

# 161 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகைக்கான அடையாள அட்டை

## எதிர்க்கட்சித் தலைவர் சிவா வழங்கினார்



புதுச்சேரி, நவ. 21-

புதுச்சேரி அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை மூலம் வில்லியனூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 161 பயனாளிகளுக்கு முதியோர், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கான உதவித் தொகை பெறுவதற்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி வில்லியனூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடந்தது.

இந்நிகழ்ச்சியில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா பயனாளிகளுக்கு உதவித் தொகை பெறுவதற்கான அடையாள அட்டையை வழங்கினார். இதில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு துறை துணை இயக்குனர் அமுதா, நல ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், அவைத் தலைவர் ஜலால், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், விவசாய அணி துணை அமைப்பாளர் கோபி, ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் காளி, இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலிமுல்லா, தொமுச தலைவர் அங்காளன், ஆதிதிராவிடர் அணி துணை தலைவர் கதிரவன், தொகுதி துணை செயலாளர்கள் ஜெகன்மோகன், ஹரி கிருஷ்ணன், பொருளாளர் கந்தசாமி, தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணி, ஏழுமலை, தங்கராசு, மிலிடரி முருகன், சேகர், வெங்கடேசன், கமால் பாஷா, வாசு, கார்த்திகேயன், சுரேஷ், சிராஜி, கோவிந்தராஜ், ரகு, முருகன், நடராஜன், அன்புநிதி, ஜீவா, அன்பு, மனோ, லட்சுமணன், ராமஜெயம், வேல்முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காரக்குறிச்சி ஸ்ரீ முத்துமுனீஸ்வர், பிடாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்



புதுக்கோட்டை, நவ. 21-

புதுக்கோட்டை மாவட்டம் திருக்கோயிலைச் சேர்ந்த காரக்குற்ச்சியில் அருள் பாலித்து வரும் ஸ்ரீ சுகந்த விநாயகர், முத்துமுனீஸ்வர், பிடாரி அம்மன், குதிரை, கருப்பர், சன்னாசி, முன்னடியான் மற்றும் மண்ணுக்கார பத்தை மண்னடிமகா காளி, கருப்பர் மற்றும் அய்யனார் ஆகிய பரிவார தெய்வங்களுக்கு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த ஆலயம் அப்பகுதியில் பிரசித்திபெற்ற ஆலயமாக திகழ்ந்து வரக்கூடிய நிலையில் இந்த ஆலயத்தின் கும்பாபிஷேக விழா கொட்டும் மழையிலும் நடைபெற்றது. இந்த கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கடந்த இரு தினங்களுக்கு முன்பு கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்ட யாகசாலையில் பல்வேறு புனித தளங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரை வைத்து பூஜைகளும் ஹோமங்களும் நடைபெற்று வந்த நிலையில் இன்று காலை இரண்டாம் கால யாகசாலை பூஜை நிறைவடைந்து யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்ட புனித நீர் உள்ள குடங்களை சிவாச்சாரியார்கள் தலையில் சுமந்து மங்கல இசை முழங்க கோயிலை சுற்றி ஊர்வலமாக எடுத்துச் சென்று பின்னர் கோயிலில் கோபர கலசத்திற்கு சென்று கருட பகவான் வானில் வட்ட மிட கோயில் கலசத்தில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது.

இதன்பிறகு பரிவார தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில் புனித நீர் புடை சூழ குவிந்திருந்த பொதுமக்கள் மீது தெளிக்கப்பட்டது. இந்த கும்பாபிஷேக விழாவில் ஆயிரம் கணக்கான பக்தர்கள் மழையில் நனைந்தவாரும் குடை பிடித்தவாரும் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டன. கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை காரக்குறிச்சி கிராம பொதுமக்கள் இளைஞர்கள் செய்திருந்தனர்.

# பெத்துசெட்டிப் பேட்டை சித்தி விநாயகர் கோவிலில் ரூ.4 கோடி மதிப்பில் தங்கத்தேர் பணி

## கவர்னர் துவக்கி வைப்பு



புதுச்சேரி, நவ. 21-

புதுச்சேரியில் சித்தி விநாயகர், சிவசுப்பிரமணியர் கோவிலில் தங்கத் தேர் செய்யும் பணியை கவர்னர் கைலாஷ்நாதன் துவக்கி வைத்தார்.

பெத்துசெட்டிப் பேட்டை சித்தி விநாயகர், சிவசுப்பிரமணியர் கோவிலில் தங்கத்தேர் செய்யும் பணி தொடக்க விழா நேற்று நடந்தது. சிறப்பு அழைப்பாளராக கவர்னர் கைலாஷ்நாதன் கலந்து கொண்டார். அவருக்கு பூர்ண கும்ப மரியாதை வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சுவாமி தரிசனம் செய்த கவர்னர், தங்கத்தேர் செய்யும் பணியை பூஜை செய்து துவக்கி வைத்தார். இந்த தங்கத்தேர், 12.5 அடி உயரத்தில், தேக்கு மரத்தில் செப்பு தகடு பதித்து அதில், 600 சவரன் தங்க மூலாம் பூசப்பட உள்ளது. இதன் மதிப்பு ரூ. 4 கோடி.

நிகழ்ச்சியில் வைத்தியநாதன் எம்.எல்.ஏ., முன்னாள் சபாநாயகர் வி.பி.சிவக்கொழுந்து, கோவில் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் மூர்த்தி வழங்கினார்



மதுரை, நவ. 21-

மதுரை மாவட்டம் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 1,052 பயனாளிகளுக்கு ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் 29 சிறந்த கூட்டுறவு சங்கங்களை பாராட்டி கேடயங்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள் வழங்கினார்.

மதுரை மாவட்டம், மடீட்சியா அரங்கத்தில் நடைபெற்ற 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அவர்கள், 1,052 பயனாளிகளுக்க ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் 29 சிறந்த கூட்டுறவு சங்கங்களை பாராட்டி கேடயமும் வழங்கினார். தொடர்ந்து, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் தெரிவித்ததாவது: கடந்த ஆண்டு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஏறத்தாழ ரூபாய் 100 கோடிக்கு மேலாக கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு முதன்முதலில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடியினை நடைமுறைப் படுத்தினார்கள். மேலும், கடன் தள்ளுபடி செய்ததோடு மட்டுமல்லாமல் மீண்டும் கடனுதவிகளை வழங்கினார்கள். கூட்டுறவு சங்கங்கள் நலிவுற்ற போதும் அரசே கடனுதவிகள் வழங்கும் பொறுப்பினை ஏற்று நடத்தியது. கூட்டுறவு வார விழாவில் கலந்து கொள்வதில் எனக்கு பெருமையாக உள்ளது. ஏனெனில் 1989 ஆம் ஆண்டு காலகட்டத்தில் நான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் தலைவராக இருந்துள்ளேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு ஏறக்குறைய ரூபாய் 900 கோடிக்கு மேலாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தள்ளுபடி மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடியினை நடைமுறைப் படுத்தினார்கள். மேலும், இதுவரை மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 3 முறை கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, துணை முதலமைச்சர் கடந்த 06.02.2023 அன்று நடைபெற்ற விழாவில், மதுரை மாவட்டத்தில் உள்ள 500 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார்கள். இவற்றின் மூலம் புதிதாக மகளிர் சுயஉதவிக் குழுக்களில் சேர்ந்த 6 ஆயிரம் நபர்கள் பயனடைந்துள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, பெண்களின் உயர்கல்விக்கு கைகொடுக்கும் புதுமைப் பெண் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்கள். கூட்டுறவு சங்கங்களின் மூலம் கடன் பெற வருவோர்களுக்கு எவ்வித ஏற்றத்தாழ்வும், வேறுபாடும் பார்க்காமல் உடனடியாக கடனுதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், விவசாயக் கடனுதவிகள் மற்றும் சிறுதொழில் செய்வதற்கு கடனுதவிகள் கோருவோர்களுக்கு உரிய நேரத்தில் கடனுதவிகள் வழங்கினால்தான் அவர்கள் அப்பணிகளை உரிய நேரத்தில் செய்ய முடியும்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் கூட்டுறவு சங்கங்கள் வளர்ச்சி அடைய வேண்டும். முற்காலத்தில் ஆண்களே வீட்டின் தலைவர்களாக இருந்து வந்தார்கள். ஆனால், தற்போது பெரும்பாலான வீடுகளில் பெண்களே வீட்டின் தலைமை பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறார்கள். பெண்கள் கல்வியிலும், வேலை வாய்ப்புகளிலும் ஆண்களை விட பெண்களே முன்னிலை வகிக்கின்றனர். பெண்கள் தாம் பணிபுரிந்து பெறும் வருவாய் முழுவதையும் தங்கள் குடும்ப செலவிற்காகவும், குழந்தைகளின் படிப்பு செலவிற்காகவும் செலவிடுகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் "எல்லோரும் எல்லாம்" பெற வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு செயலாற்றி வருகிறார்கள் என வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளின் போது, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சி.குருமூர்த்தி அவர்கள், மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் வாஞ்சிநாதன், பாண்டியன் கூட்டுறவு வங்கி மேலாண் இயக்குநர் மனோகரன், நகர கூட்டுறவு வங்கி இணைப் பதிவாளர் ஹேமா சலோமி, ஆவின் பொது மேலாளர் சிவகாமி உட்பட கூட்டுறவு சங்கங்களின் உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தென்கரைக்கோட்டை, இராமியம்பட்டியில் உணவு பாதுகாப்பு துறையினர் திடீர் ஆய்வு



தருமபுரி, நவ. 21-

தருமபுரி மாவட்ட உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா, மாவட்டம் முழுவதும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும்தடைசெய்யப்பட்ட நெகிழி கவர்கள், சில்வர் பேப்பர்களில் உணவு பார்சல் மற்றும் பரிமாற படுகிறதா என உணவகங்களில் கண்காணித்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். கோபிநாதம்பட்டி காவல் நிலையத்துக்கு உட்பட்ட தென்கரைக்கோட்டையில் ஒரு பெட்டிக்கடை மற்றும் வடகரையில் ஓர் பெட்டி கடை என இரண்டு கடைகளில் இருந்து தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் காவல் துறையினர் கண்டெடுத்து பறிமுதல் செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிந்து மேற்நடவடிக்கைக்காக உணவு பாதுகாப்பு துறைக்கு பரிந்துரை அடிப்படையில் மேற்கண்ட இரண்டு கடை உரிமையாளர்களுக்கு உடனடி அபராதம் தலா ரூபாய்.25000 மற்றும் 15 தினங்கள் கடை இயங்க தடை விதித்தும் மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா, உத்தரவிட்டார். அதனை காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் மற்றும் கோபிநாதம்பட்டி காவல் நிலைய சிறப்பு நிலை உதவி ஆய்வாளர் பிரகாசம் இணைந்து கடை இயங்க தடை உத்தரவு நகல் மற்றும் ரூபாய்.25000 அபராதம் தெரிவித்து மறுஉத்தரவு வரும் வரை கடை திறக்க கூடாது எச்சரித்து கடை மூட செய்தனர்.

மேலும் உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் உள்ளிட்ட குழுவினர் இராமியம்பட்டி மற்றும் சிந்தல்பாடி பகுதிகளில் உள்ள உணவகங்கள், பேக்கரிகள், மீன் இறைச்சி கடைகள் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை மாணவியர் விடுதி உள்ளிட்டவற்றில் ஆய்வு செய்த போது இராமியம்பட்டியில் ஒரு மீன் இறைச்சி வருவல் கடையில் குளிர் பதன பெட்டியில் இருப்பு வைத்திருந்த நாள் பட்ட மீன் இறைச்சி, உரிய விபரங்கள் இல்லாத கார்ன் பிளார் மாவு பாக்கெட் உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது.

அருகில் ஒரு உணவகத்தில் தடை செய்யப்பட்ட ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி கவர்களில் உணவு பார்சல் கண்டு பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது. மேற்படி இரண்டு கடைகளுக்கும் மாவட்ட நியமன அலுவலர் உத்தரவு படி முறையே ரூபாய்.1000 மற்றும் ரூபாய்.2000 உடனடி அபராதம் விதித்து எச்சரிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டது.

# "நீர்நிலைகளில் மிதக்கும் கழிவுகளை அகற்றி சுத்தப்படுத்தும் தானியங்கி உபகரணம்"

## கலசலிங்கம் பல்கலை மாணவர்கள் கண்டுபிடிப்பு



ஸ்ரீவில்லிபுத்தூர், நவ. 21-

ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலையில் இசிஇ இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் பி. சக்தி சவ்பாமிகா, டி.ஜெயவீர ரெட்டி, என்.சேவானந்த ரெட்டி, எஸ்.சண்முகலட்சுமி, ஆர்.சந்திர கமலி, ஆகியோர் பல்கலை சர்வதேச தொழிற்சாலை உறவு இயக்குநர் முனைவர்.ராஜா கிருஷ்ணமூர்த்தி வழிகாட்டுதல்படி "நீர்நிலைகளில் மிதக்கும் கழிவுகளை அகற்றி சுத்தப்படுத்தும் சூரியசக்தியால் இயங்கும் தானியங்கி உபகரணம்" புராஜக்ட் செய்து பல்கலை துணைத்தலைவர் முனைவர் எஸ்.சசிஆனந்த் முன்னிலையில் பல்கலை நீச்சல் குளத்தில் உபகரணத்தை இயக்கி இலை, தழைகளை போன்ற மிதக்கும் கழிவுகளை சேகரித்து வெளியேற்றி நீச்சல் குளத்தை சுத்தம் செய்து காண்பித்தனர்.

இந்த உபகரணத்தில் 12 வோல்ட் சோலார் போர்டு, எம்பிபிடி மின் சக்தி அளவீடு, சக்தி சேமிக்கும் 12 வோல்ட், 8 ஆம்ப் பேட்டரி, மிதக்கும் கழிவுகளை எடுக்கும் கன்வேயர், ட்ரே, சென்சார்கள், சுயரோஸ்கோப், போன்றவற்றை கொண்டு வடிவமைத்தாக மாணவர்கள் கூறினர்.

மேலும், கை தொலைபேசியை ஆன் செய்தவுடன் பாதை கண்டறிதல் அல்காரிதம் மூலம் இரண்டு கட்டைகள் மீது வைக்கப்பட்ட இந்த உபகரணம் மிதந்து திடகழிவுகள் ,இலை, தழை போன்ற நீரில் மிதப்பவைகளை கன்வேயர் மூலம் அகற்றி அதன் வழியாக பின்னால் இருக்கும் ட்ரேயில் சேகரிக்கிறது. ட்ரே நிரப்பியதும் ஒரு ஓரத்தில் இயக்கி கொண்டு வந்து கழிவுகளை வெளியே எடுத்து கொட்டிவிடலாம் என்று உபகரண இயக்கத்தை விவரித்தனர் மாணவர்கள்.

இந்த உபகரணம் செய்வதற்கு தோரயமாக 75,000 ரூபாய் செலவானது என்றும் பல்கலை தொழிற்சாலை உறவு அலுவலக முயற்சியால் சிட்டி யுனிவர்சிட்டி ஆப் லண்டன், உபகரணம் செய்வதற்கு தேவையான நிதி உதவியை வழங்கியுள்ளது. பல நீர்நிலைகள் அசுத்தமாக இருக்கும் தற்போதைய நிலையில் உடனே சூரிய சக்தியால் இயக்கி சுத்தபடுத்துவதற்கு அத்தியாவசியமான உபகரணம் மக்களுக்கு பயன்படும் வகையில் செய்து சாதனை புரிந்த மாணவர்களையும் வழிகாட்டிய தொழிற்சாலை உறவு இயக்குநர் முனைவர். ராஜா கிருஷ்ணமூர்த்தி, அலுவலர் ஜெயக்குமார் ஆகியோர்களையும் வேந்தர் முனைவர். கே. ஸ்ரீதரன், இனணவேந்தர் டாக்டர். அறிவழகி ஸ்ரீதரன், துணைத்தலைவர் முனைவர். எஸ். சசிஆனந்த், துணைவேந்தர் முனைவர். எஸ். நாராயணன், பதிவாளர் முனைவர் வே. வாசுதேவன் ஆகியோர் பாராட்டினர்.

# உலக கழிப்பறை தினத்தை முன்னிட்டு தூய்மை நடைபயணம் உறுதிமொழியேற்பு




தேனி, நவ. 21-

தேனி மாவட்டம், பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் உலக கழிப்பறை தினத்தை (World Toilet Day) முன்னிட்டு, தூய்மை நடைபயணம் உறுதி மொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷஜீவனா, தலைமையில் அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி திட்டத்தின்கீழ். "நமது கழிப்பறை நமது மரியாதை" என்ற தலைப்பின் கீழ் விழிப்புணர்வு பிரச்சாரம் உலக கழிப்பறை தினம் 19.11.2024 இல் தொடங்கி மனித உரிமை தினம் 10.12.2024 அன்று நிறைவு நிறைவு செய்யப்பட உள்ளது. தேனி மாவட்டத்தில் இதன் துவக்கமாக, திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற கிராமமாக திகழ்ந்திட முயற்சி செய்வோம். குப்பைகளை மட்கும் குப்பை, மட்காத குப்பை என தரம் பிரிப்போம்.

மட்கும் குப்பை களை வீட்டிலேயே உரமாக்கி வீட்டுதோட்டத் திற்கு பயன்படுத்துவோம். தரம் பிரிக்கப்பட்ட குப்பையை மட்டுமே தூய்மை பணியாளர் களிடம் கொடுப்போம். நீர்நிலைகள் திட மற்றும் திரவக்கழிவுகளால் மாசுபடாமல் பாதுகாப்பே பாம். வீட்டிலும், பொது இடங்களிலும் மரங்கள் வளர்த்து சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கு பங்காற்றுவோம். குறைத்தல், மறுசுழற்சி, மறுபயன்பாடு என்ற கொள்கையினை பின்பற்றுவோம். திடக்கழிவு மேலாண்மை, திரவக்கழிவு மேலாண்மை. கழிப்பறை பயன்பாடு மற்றும் நெகழி பொருட் களை தவிர்த்தல் குறித்து தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முழுமையாக பங்காற்றுவோம் என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, புதிதாக தனிநபர் இல்லக்கழிப்பறை கட்டும் பணிக்கு பொம்மிநாயக்கன் பட்டியை சேர்ந்த 2 பயனாளிகளுக்கு வேலை உத்தரவுக்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர், அபிதா ஹனீப், மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் பேயத்தேவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலர்விழி, பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசின் திட்டங்கள் குறித்து புகைப்பட கண்காட்சி



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் போத்தம்பட்டி ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் சாதனை திட்டங்கள் குறித்து விளக்கும் சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்

# சிங்கார வேலர் சிலைக்கு முதலமைச்சர் ரங்கசாமி மாலை அணிவித்து மரியாதை



**புதுச்சேரி, நவ. 21–**

ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 21ஆம் நாள் உலக மீனவர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலக மீனவர் தினமான இன்று புதுச்சேரி, வெங்கடசுப்பா ரெட்டியார் சாலையில் அமைந்துள்ள சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் திருவுருவச்சிலைக்கு முதலமைச்சர் ந.ரங்கசாமி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பொதுப்பணித்துறை அமைச்சர் க. இலட்சுமிநாராயணன், அரசு கொறடா V. ஆறுமுகம் (எ) A.K.D., சட்டமன்ற உறுப்பினர் S. ரமேஷ் (எ) ரி.ஷி.றி., மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# கால்நடை மருத்துவ முகாமை ஆட்சியர் ஆய்வு



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், முத்துகுமரன் மலையில் நடைபெற்று வரும் கால்நடை மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட வன அலுவலர் குருசுவாமி தபாலா, வேலூர் வருவாய் கோட்டாட்சியர் இரா.பாலசுப்பிரமணியன், கால்நடைத்துறை இணை இயக்குநர் மரு.கோபி கிருஷ்ணன், உதவி இயக்குநர் மரு.அந்துவன், அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா உட்பட பலர் உடனிருந்தனர்.

# இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையத்தில் ஆட்சியர் ஆய்வு



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஈஞ்சம்பள்ளி ஊராட்சியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, குறைகளை கேட்டறிந்தார்.

# ஆலோசனைக்கூட்டம்



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டத்தில் கடந்த 23.10.2024 முதல் 09.11.2024 வரை நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி ஆணையாளர் ரஞ்ஜீத் சிங், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, மேட்டூர் சார் ஆட்சியர் நே.பொன்மணி, உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# விழுப்புரம் முண்டியம்பாக்கத்தில் தார் சாலை அமைக்கும் பணியை ஆட்சியர் ஆய்வு



**விழுப்புரம், நவ. 21–**

விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு புறவழிச்சாலை முகப்பிலிருந்து நிர்வாக கட்டடம் வரை தார் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பழனி ஆய்வு செய்தார். பின்னர் மாவட்ட ஆட்சியர் பழனி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்: விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு புறவழிச் சாலை முகப்பிலிருந்து நிர்வாக கட்டடம் வரை பொதுப்பணித்துறை மூலம், ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் 500 மீட்டர் நீளம் மற்றும் 6 மீட்டர் அகலத்திற்கு தார் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன், பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் மற்றும் மருத்துவமனை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள மகப்பேறு மற்றும் மகளிர் நலத்துறை பிரிவினை நேரில் பார்வையிட்டு சிகிச்சை பெற்று வருபவர்களின் விவரம் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்ததுடன் மகப்பேறு பிரிவில் உள்ள படுக்கை அறை வசதி ஸ்கேன் வசதி உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் மருத்துவமனை வளாகத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கழிவறை சுகாதாரமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப் பட்டது டாக்டர் பழனி தெரிவித்தார் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வின்போது, பொதுப் பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பரிதி செயற் பொறியாளர் செல்வக் குமார், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மற்றம் மருத்துவமனை முதல்வர் ரமாதேவி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்

# மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கட்டுமான பணியினை ஆட்சியர் ஆய்வு செய்தார்



தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ், புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பனம்பட்டி ஊராட்சி, மருதாந்தலை கிராமத்தில், புதிதாகக் கட்டப்பட்டுவரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கட்டுமானப் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ.ஷோபா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# ஒடுகத்தூர் பேரூராட்சியில் கட்டப்படும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கட்டுமான பணிகளை ஆட்சியர் ஆய்வு



"உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, ஒடுகத்தூர் பேரூராட்சியில் அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ் சந்தைமேடு பகுதியில் 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது பேரூராட்சிகள் உதவி இயக்குநர் ஞானசுந்தரம், உதவி செயற்பொறியாளர் அம்சா, செயல் அலுவலர் ஜீவானந்தம், அணைக்கட்டு வட்டாட்சியர் வேண்டா உட்பட பலர் உடனிருந்தனர்.

# மொரப்பூரில் இளம் வயது திருமணம் மற்றும் பெண் சிசுக்கொலை தடுப்பு விழிப்புணர்வு முகாம்



தருமபுரி, நவ. 21-

தர்மபுரி மாவட்டம்,மொரப்பூர் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் இளம் வயது திருமணம் மற்றும் பெண் சிசுக்கொலை தடுப்பு விழிப்புணர் முகம் மொரப்பூரில் நடைபெற்றது. இம்முகாமிற்கு கடத்தூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர். அரசு தலைமை வகித்தார். மொரப்பூர் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் டாக்டர். வனிதா முன்னிலை வகித்தார். சுகாதார ஆய்வாளர் ராஜேஷ் கண்ணா வரவேற்று பேசினார். முகாமில் இளம் வயது திருமணத்தால் ஏற்படும் தீமைகள் குறித்தும், இளம் வயது திருமணம் செய்பவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இளம் வயது திருமணம் நடப்பது குறித்து யாருக்கேனும் தகவல் தெரிந்தால் அவர்கள் தயங்காமல் சமூக நலத்துறைக்கோ அல்லது எங்களுக்கோ உடனடியாக தகவல் கொடுக்கலாம். இளம் வயது திருமணம் சட்டப்படி செல்லாது எனவே இளம் வயது திருமணத்தை தடுக்க வேண்டும்.மேலும் சட்டத்திற்கு புறம்பாக பெண் சிசுக்கொலை,கருவில் குழந்தையின் பாலினத்தை கண்டறிந்து பெண் குழந்தை என்றால் கருவில் அழிப்பது போன்ற தீய செயல்களை தடுக்க வேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வி, வேலைவாய்ப்பு, அறிவியல் கண்டுபிடிப்பு, மருத்துவம், காவல்,விமானம்,ரெயில்வே,போக்குவரத்து, மின்சாரம்,வேளாண்மை,பொறியாளர் போன்ற அனைத்து துறைகளிலும் இன்று சிறந்து விளங்குகிறார்கள் எனவே பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகளுக்கு இணையாக நாம் போற்ற வேண்டும். போன்ற கருத்துக்கள் குறித்து பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.முகாமில் மொரப்பூர் பகுதியை சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.முடிவில் பகுதி சுகாதார செவிலியர் லட்சுமி நன்றி கூறினார்.

# சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி




விழுப்புரம், நவ. 21-

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் பகுதியில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை சார்பாக தேசிய குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. நவம்பர் 19 உலக குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு தினம் நவம்பர் 20 சர்வதேச குழந்தைகள் தினத்தை முன்னிட்டு குழந்தைகளுக்கான நடைப்பயணம் மாவட்ட குழந்தைகள் நல அலுவலர் பார்கவி தலைமையில் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்

கண்டாச்சிபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ஸ்ரீ தேவி ரவிக்குமார் முன்னிலை வகித்தார். பின்னர் குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டாய திருமணம் மற்றும் பாலியல் வன்கொடுமை பற்றியும் பெண்களுக்கு நடக்கும் குற்றங்கள் குழந்தை தொழிலாளர்களை தடுக்கும் முறை பிரிவு 1098 பெண் குழந்தைகளை பாதுகாக்கும் தொலைபேசி எண் போன்றவற்றை விழிப்புணர்வு ஏற்படுத்தினர் இந்நிகழ்ச்சியில் காவல் ஆய்வாளர் ஷாகுல் அமீத், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் பிரேமலதா மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு ஆலோசகர் முருகன் கண்டாச்சிபுரம் உதவி காவல் ஆய்வாளர் காத்தமுத்து, விழுப்புரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் குற்ற தடுப்பு பிரிவு அலுவலர் கலைச்செல்வி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழழகன் இல்லம் தேடி கல்வி திட்ட தன் ஆர்வலர்கள், வட்டார கல்வி அலுவலர் க.அஞ்சலாதேவி,வட்டாரவளமேற்பார்வையாளர் தமிழரசு ஆசிரியர் பயிற்றுநர் ஏழுமலை ஆசிரியர் சிவசங்கரன் முதன்மை தன் ஆர்வளர் லீலாவதி கண்டாச்சிபுரம் கிராம நிர்வாக அலுவலர் பிரசாத் குமார் இல்லம் தேடி கல்வி தன் ஆர்வலர்கள் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் கலந்து கொண்டனர்.

### விழுப்புரத்திற்கு முதலமைச்சர் வருகை புரிவதையொட்டி

# முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம்

விழுப்புரம், நவ. 21-

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விழுப்புரம் மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க தமிழ்நாடு முதலமைச்சர் வருகைபுரிவதையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பழனி தலைமையில் நடைபெற்றது.



மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில் செய்தியாளர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு புரிந்து 28.11.2024 மற்றும் 29.11.2024 ஆகிய தேதிகளில் அரசு நிகழ்ச்சிகளான எல்லீஸ் அணைக்கட்டு முன்னாள் அமைச்சர் திரு.ஏ.கோவிந்தசாமி அவர்களின் நினைவு அரங்கம் இட ஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டில் உயிர்நீத்த 21 சமூக நீதி போராளிகளின் தியாகத்தினை போற்றும் மணிமண்டபம் திறப்பு விழா மற்றும் பல்வேறு துறைகள் சார்பாக அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் அரசு நலத்திட்ட உதவிகள் பெறும் பயனாளிகள் தேர்வு பட்டியலை துறை சார்ந்த அலுவலர்கள் தயார் செய்வதோடு, பயனாளிகளை அரசு நிகழ்ச்சிக்கு உரிய நேரத்தில் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கான வாகனம் ஏற்பாடு செய்திட வேண்டும். மேலும் பயனாளிகளுக்கு நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் சிற்றுண்டி வசதிகள் உள்ளிட்டவற்றை ஏற்படுத்திக்கொடுத்திட வேண்டும்.

மேலும், நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் தொடர் மின் வசதி ஜெனரேட்டர் வசதி தற்காலிக கழிவறை வசதியினை நகராட்சி நிர்வாகத்தால் ஏற்படுத்திட வேண்டும். மேலும் சுகாதாரத்துறை சார்பில் தற்காலிக மருத்துவ முகாம் தீயணைப்புத்துறை சார்பில், தீயணைப்பு வாகன வசதி, காவல் துறை சார்பில் பாதுகாப்பு வசதிகள் உள்ளிட்டவற்றை முன்னேற்பாடாக ஏற்பாடு செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட ஆட்சியர் பழனி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷீ நிகம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) யோகஜோதி ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் ராஜா தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) முகுந்தன் உட்பட துறை சார்ந்த அலுவலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அரசின் சாதனைகள் விளக்க புகைப்படக் கண்காட்சி



சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், கடம்பூர் ஊராட்சி மன்ற திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# விவசாயிகளுக்கு வேளாண் உபகரணங்களை ஆட்சியர் வழங்கினார்



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் அணைக்கட்டு வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்திற்கு பிறகு தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் சார்பில் தேசிய வேளாண் இயக்க திட்டத்தின் கீழ் 2 விவசாயிகளுக்கு ரூபாய்.26,000/- மதிப்பிலான வேளாண் உபகரணங்களை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நீ.செந்தில்குமரன், மகளிர் திட்ட இயக்குநர் உ.நாகராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ச.திருகுணஜயப்பதுரை மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்ற ஆட்சியர்



தமிழ்நாடு முதலமைச்சரின் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, திருவட்டார் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம் உட்பட பலர் உள்ளார்கள்.

# பயனாளிகளுக்கு பட்டா வழங்கிய ஆட்சியர்



மக்களை நாடி அவர்களின் குறைகளைத் தீர்க்க தமிழ்நாடு அரசின் "உங்களைத் தேடிஉங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் 06 பயனாளிகளுக்கு நத்தம் பட்டாக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் வழங்கினார்கள். உடன் கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், கோவில்பட்டி வருவாய் கோட்டாட்சியர் க. மகாலட்சுமி, மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

# தமிழகத்துக்கு 26ம் தேதி ரெட் அலார்ட்



# நீதிமன்றத்தில் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் ஆஜர்

# பஸ் கவிழ்ந்து 7 பேர் பலி

# தங்கம் விலை அதிரடி உயர்வு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 21-11-2024 வியாழக்கிழமை •வெளியூர்: 22-11-2024 வெள்ளிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்